டாக்டர் தே. குமாரதாஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளம் மருத்துவக் கல்லூரியில் 300 படுக்கை வசதிகொண்ட மருத்துவமனைக் கட்டடம் கட்டுவதற்கு அரசாணை எண் 219, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 19-11-2002-ன்படி ரூ.5 கோடி அனுமதிக்கப்பட்டு, கட்டடம் கட்டி முடிக்கின்ற சூழ்நிலையில் இந்த மருத்துவக் கல்லூரிக்குத் தேவைப்படும் கூடுதல் கட்டடங்கள் கட்டுவதற்கு மேலும் ரூ.45.80 கோடி, தற்போது அரசாணை எண் 244, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 23-7-2004-ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 50 கோடி ரூபாய் எங்களுக்கு, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரி கட்டுவதற்கு அனுமதி தந்த டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு குமரி மாவட்ட மக்களின் சார்பாக நன்றிகள் கோடி, கோடி என்று கூறி இதற்கு உறுதுணையாக இருந்த நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தளவாய் சுந்தரம் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல கட்டடங்கள் கட்டுவதற்கு, துரிதப் பணிகளை மேற்கொண்டிருக்கிற நமது பொதுப் பணித் துறை அமைச்சர் மாண்புமிகு பன்னீர்செல்வம் அண்ணாச்சி அவர்களுக்கும் குமரி மாவட்ட மக்களின் சார்பாக இதயம் கனிந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும், நன்றியையும் கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11-25

3. கவன ஈர்ப்பு

லால்குடி தொகுதி, மாந்துறை—பூவாளூர் புறவழிச்சாலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. எஸ்.எம். பாலன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத் தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள். திரு. எஸ்.எம். பாலன்.

***திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி தொகுதியில் சிமெண்ட் ஆலைகளிலிருந்து திருச்சி-சிதம்பரம் சாலையில் செல்லும் கனரக

வாகனங்கள் லால்குடி கடை வீதி வழியாகச் செல்வதால் அடிக்கடி விபத்துகள் மற்றும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதைத் தவிர்க்க, மாந்துறை நகரிலிருந்து திருமங்கலம், அகலங்கநல்லூர், பூவாலூர் வழியாக புறவழிச்சாலை உடனடியாக அமைக்க வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து," மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத் தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவர அறிக்கை

லால்குடி நகரத்தில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க திருச்சி-சிதம்பரம் சாலையில் லால்குடி நகரத்திற்கு முன்பாக, கி.மீ. 8.6-ல் பிரிந்து பின்வரும் சாலைப் பகுதிகளின் வாயிலாகப் புறவழிச்சாலை அமைக்க வேண்டும்:

		(நீளம் மீட்டரில்)
1.	*மாந்துறை நகர்-திருமங்கலம் சாலை (கி.மீ. 0/0-4/4) (மாவட்ட இதர சாலை)*	*4400*
2.	*சிறுதையூர்-திருமங்கலம் சாலை (கி.மீ. 1/6-2/0) (மாவட்ட இதர சாலை)*	*400*
3.	*கூழையாற்றின் நீர்வழிப்பாதை*	*150*
4.	*மண்பாதை (புறம்போக்கு)*	*400*
5.	*அகலங்கநல்லூர் சாலை (கி.மீ. 0/0-2/0) (கரும்பு மேம்பாட்டுத் திட்ட சாலை)*	*2000*
6.	*திருச்சி-சிதம்பரம் சாலை (கி.மீ. 14/6-14/2) (மாநில நெடுஞ்சாலை எண் 24)*	*300*
	மொத்தம்	*7650*

2004 ஜூலை 29] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மேற்கூறிய சாலைப் பகுதிகளின் வழியே புறவழிச்சாலை அமைக்க தோராயமாக ரூ.1,200 இலட்சங்கள் தேவைப்படும். மேற்கூறிய புறவழிச்சாலை அமைக்கும் பணியானது அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை. எதிர்வரும் ஆண்டுகளில் அரசின் நிதிநிலைமைக்கேற்ப, இப்பணியை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. எஸ்.எம். பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த விவர அறிக்கையைப் படித்தேன். எதிர் வரும் ஆண்டுகளில் நிதிநிலைமைக்கேற்ப பணி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று இருந்தது. மேற்கூறிய சிதம்பரம் சாலையில் கடைவீதி அமைந்துள்ளது. லால்குடி அரசு மருத்துவமனை, லால்குடி வட்டாட்சியர் அலுவலகம், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, நீதிமன்றம், பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சார்பதிவாளர் அலுவலகம் இவை அனைத்தும் 500, 600 மீட்டருக்குள்ளேயே அமைந்துள்ளன. இந்தச் சாலையில் கடைவீதியும் அமைந்துள்ளது. இதனால் தினசரி போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. 5 சிமெண்ட் ஆலைகளிலிருந்து கனரக வாகனங்கள் வருகின்றன. இப்பணி, தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகிறது. கடை ஏழு வள்ளல்களின் மறு பிறவியாக விளங்கும் அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு இதை மறுபரிசீலனை செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு இல்லாவிட்டாலும், அடுத்த ஆண்டு, பணி மேற்கொள்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி - சிதம்பரம் நெடுஞ்சாலையானது மாநில நெடுஞ்சாலையாகும். இந்தச் சாலையின் போக்குவரத்துச் செறிவு 15,500 ஆகும். லால்குடி நகரம் திருச்சி - சிதம்பரம் நெடுஞ்சாலையில் கி.மீ. 12/2-ல் அமைந்துள்ளது. மேலும் இந்தச் சாலையில் கி.மீ. 18/2 காட்டூரில் கோத்தாரி சர்க்கரை ஆலை ஒன்றும், கி.மீ. 29-ல் கள்ளக்குடியில் டால்மியா சிமென்ட் ஆலையும் அமைந்துள்ளன. லால்குடி நகராட்சியின் உள் பகுதியான திருச்சி - சிதம்பரம் சாலை சுமார் 5 கி.மீ. நீளம் உள்ளது. தற்போது அனைத்து கனரக வாகனங்களும் இந்த நகராட்சியின் வழியாகச் செல்கின்றன. தற்போது இந்தச் சாலையின் அகலம் 7 மீட்டர் மட்டுமே உள்ளது. எனவே உள்ளூர் மற்றும் வெளியூர்

செல்லும் போக்குவரத்துக்கு ஏற்ப லால்குடி நகரப் பகுதிக்குள் இருக்கிற 7 மீட்டர் சாலையை அகலப்படுத்த சாத்தியக்கூறு இல்லை. ஏனெனில், இருபுறமும் கட்டடங்கள் உள்ளன. எனவே வெளியூருக்கு நேராகச் செல்லும் அனைத்து வாகனப் போக்குவரத்துகளும் லால்குடி நகரின் உள்ளே செல்லும்போது உள்ளூர்ப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, லால்குடிக்கு முன்பாக உள்ள மாந்துறையிலிருந்து திருமங்கலம், அகலங்கநல்லூர், பூவாலூர் வழியாக லால்குடி நகரின் இடது புறம் அமைந்துள்ள இதர மாவட்டச் சாலைகளை அபிவிருத்தி செய்து, கூழையாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டி நேராகச் செல்லும் கனரக வாகனங்களை இதன் வழியாக அனுமதித்தால் லால்குடி நகருக்குள், உள்ளூர்ப் போக்குவரத்து இடையூறு இன்றி நடைபெற வாய்ப்பு ஏற்படுகின்றது. இச்சாலையின் நடுவே கூழையாற்றின் இருவழிப்பாதை 150 மீட்டர் நீளத்திற்கு உள்ளது. இந்த ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டவும், லால்குடிக்கு இடதுபுறம் அமைந்துள்ள புறவழிச்சாலையில் அமையும் இதர மாவட்டச் சாலைகளை 7 கி.மீ. நீளம் உள்ள ஒருவழிப் பாதையிலிருந்து இரு வழிப் பாதையாக ஆக்கவும் ரூ.4 கோடி தேவைப்படும் என மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கின்றது. வரும் நிதி ஆண்டில் நிதிநிலைமைக்கேற்ப இத்திட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

4. அறிக்கைகள் அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், முனைவர் மு. தம்பிதுரை.

டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று நாற்பத்து நான்காவது முதல் நூற்று ஐம்பத்து இரண்டாவது வரையிலான ஒன்பது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.